இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் III பரீட்சை – ஜனவரி 2022

## (Level III Examination - January 2022)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 540, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் III பரீட்சை – ஜனவரி 2022

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 20 புள்ளிகள்) **பகுதி - A**

*வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 01 - வணிகச் சூழலும் ஆளுகைக் சட்டக கட்டமைப்பும்*

**(a)**

1. உயரிய வெளிப்படைத்தன்மை
2. உயரிய பொறுப்புக்கூறல்
3. செயற்பாட்டு திறன்கள்
4. இடர் எதிர்வுகொள்கின்ற சிறந்த தன்மை
5. தவறான முகாமைத்துவத்திற்கான வாய்ப்பு குறைவாக இருத்தல்
6. குறைவான மோசடிகள் மற்றும் குழப்பங்கள்
7. உள்ளக கட்டுப்பாட்டின் உறுதிப்படுத்தல்
8. மேம்பட்ட தீர்மானமெடுத்தல்
9. சட்டங்களை பின்பற்றல்
10. நேரான நடத்தைகளை ஊக்கப்படுத்தல்
11. நன்மதிப்பு மற்றும் சிறந்த உறவு
12. சிறந்த முகாமைத்துவம்

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. மேற்பார்வை பொறுப்புக்கள் - சபை மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கள், முகாமை பொறுப்புக்கூறல் மற்றும் குழுவின் அதிகாரமும் பொறுப்புக்களும்

2. திறன் மற்றும் கலாச்சாரம் - நிறைவேற்று முகாமைத்துவம் சலுகைகள், வணிகமும் செயற்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் திறன் நிகழ்ச்சி நிரல்.

3. உள்ளக கட்டமைப்பு – கொள்கைகள் நடைமுறைகள், அறிக்கையிடல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்.

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 02 - இடர் முகாமைத்துவ கட்டமைப்பு*

### 1) செயற்பாட்டு இடர்

ஒரு குறித்த தளத்திற்குள் அல்லது கைத்தொழில் துறைக்குள் கம்பனியொன்று அன்றாட வணிக நடவடிக்கைகளை செய்ய முயற்சிக்கும் போது நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சிக்கல்கள் என்பவற்றுக்கு முகங்கொடுக்கின்றது. இது உள்ளக நடைமுறைகள், ஆட்கள் மற்றும் முறைமைகள் என்பவற்றிலுள்ள இடையூறுகளிலிருந்து உருவாகின்றது.

***உதாரணங்கள்:***

1. நிறுவனத்தின் தகவல் முறைமை துண்டாடப்பட்டமை மற்றும் தகவல்கள் திருடப்படுகின்றமை
2. எதிர்பாராத பொறி பழுதுகள்
3. ஊழியர் வேலை நிறுத்தங்கள்
4. நிரம்பலின் எதிர்பாராத பற்றாக்குறைகளும் வாடிக்கையாளர்களின் கட்டளைகளை நிறைவுசெய்யத் தவறுதலும்

### 2) மோசடி இடர்

ஊழியர் ஒருவரால் அல்லது வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி நடவடிக்கையின் காரணமாக எழுகின்ற சாத்தியமான இடராகும்

***உதாரணங்கள்:***

1. நிறுவனத்தின் சொத்துக்களை களவெடுத்தல்
2. மோசடியான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல்
3. மோசடி நடவடிக்கைகள் இடம்பெற உதவுதல்
4. மோசடி இழைக்கும் எண்ணத்துடன் பிழையான நிதித் தகவல்களை முன்வைத்தல்
5. நிறுவனத்தின் தரவுகள் மற்றும் தகவல்களை தவறாகப் பயன்படுத்தல்
6. வேண்டுமென்றே தவறான தகவல்களை உருவாக்குதல்

### 3) இணக்கப்பாட்டு இடர்

இணக்கப்பாட்டு இடர் என்பது முக்கியமானதொரு சட்டத்துடன் அல்லது விதிமுறைகளுடன் இணங்கத் தவறுதலாகும். விதிமுறைகளுடன் இணக்கப்பாடற்ற நிலையிலான விளைவொன்று தண்டப்பணம் போன்ற நட்டங்களாக உருவெடுக்கும்.

***உதாரணங்கள்:***

1. ஊழியர் கம்பனியின் விதிமுறைகளுக்கு அமைய இணங்க தவறுதல்
2. வங்கியொன்று மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட தேவைப்பாடான மூலதன போதுமான தன்மை வீதத்தை பேண தவறுதல்
3. காப்புறுதிக் கம்பனியொன்று காலாண்டு நிதிக்கூற்றுக்களை காப்புறுதிச் சபைக்கு சமர்ப்பிக்கத் தவறுதல்.
4. EPF மற்றும் ETF செலுத்த தவறுதல்

5. வரி செலுத்த தவறுதல்
6. AGM நடத்த தவறுதல்
7. BOI அறிக்கையிடல் சமர்ப்பிக்க தவறுதல்

**4) நன்மதிப்பு இடர்**

நிறுவனமொன்று பொதுமக்கள் மத்தியில் கொண்டுள்ள நன்மதிப்பை பாதகமான சம்பவம் ஒன்று அல்லது தொடர்ச்சியான செயல்கள் காரணமாக இழப்பதாகும்.

***உதாரணங்கள்:***

1. வணிக செயற்பாடுகளை ஒரு சினேகபூர்வமான விதத்தில் நிறைவேற்ற தவறுதல்
2. தரம் குறைந்த பொருட்களை வழங்குதல்
3. வாடிக்கையாளர் தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தவறுதல்
4. சிறந்த வணிக நடைமுறைகளை பின்பற்றத் தவறுதல்

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 02 - இடர் முகாமைத்துவ கட்டமைப்பு***

1. **மூன்று தரப்பினர் உறவைக் கொண்டது** : கணக்காய்வாளர், வங்கி, SJ தனியார் கம்பனி
2. **பொருத்தமான விடயதானம்** : 5 வருடங்களுக்கான எதிர்வு கூறல் அறிக்கை.
3. **பொருத்தமான பிரமாணங்கள்** : எதிர்வுகூறல் மீதான சுயாதீன கணக்காய்வாளர் அபிப்பிராயம்
4. **போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகள்** : எதிர்வுகூறல் மீதான சான்றுகள்
5. **முடிவுரை** : எதிர்வுகூறல் மீதான கணக்காய்வாளரது அறிக்கை

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 09 - நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஒன்றுக்கான தேவைப்பாடுகள்***

**(a)**

1. தொழில்சார் கல்வி
2. பயிற்சியளித்தல் உட்பட தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி
3. வேலை அனுபவம்
4. மிக அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள், உதாரணமாக பணிக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள்
5. தனிநபர் வழிகாட்டல் கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள்
6. குழச் செயற்பாடுகள்
7. தேவைப்படும் போது நிபுணர்களை பணிக்கமர்த்தல்
8. சுயாதீனமாக இருக்கவேண்டியவர்களுக்கான சுயாதீனக் கல்வி

***(02 புள்ளிகள்)***

**(b)**

1. பணிக்கமர்த்தல் நிறைவேற்றுகை
2. கண்காணிப்பு
3. வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் குறிப்பிட்ட பணிக்கமர்த்தலின் ஏற்பும் தொடர்ச்சியும்
4. மனித வளங்கள்
5. பொருத்தமான நெறிமுறைத் தேவைப்பாடுகள்
6. நிறுவனத்திற்குப்பட்ட தரத்திற்கான தலைமைத்துவ பொறுப்புக்கள்

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 05 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயன்முறை*

**(a)**

இடர் மதிப்பீட்டு செயன்முறை - அகக்கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக, நிறுவனம் மற்றும் அதன் சூழல் தொடர்பான புரிதலை பெற்றுக்கொள்வதற்காக இடர் மதிப்பீட்டு செயன்முறைகளை மேற்கொள்ளுதல், உறுதிச்சொல் மட்டத்தில் மற்றும் நிதிக்கூற்றுக்கள் மட்டத்தில் வழுக்கூற்றுக்களை அல்லது மோசடிகறை ஏற்படுத்தக்கூடிய வணிக இடர்களை அடையாளம் காணுதல் என்பன இடர் மதிப்பீட்டு செயன்முறைகளாகும்.

*(02 புள்ளிகள்)*

**(b)**

1. முகாமை மற்றும் மூன்றாம் நபரினை விசாரித்தல்
2. பகுப்பாய்வு நடைமுறைகள்
3. அவதானிப்புக்கள்
4. பரீட்சித்தல்
5. உள்ளக கணக்காய்வாளரிடம் விசாரணைகள்

*(03 புள்ளிகள்)*

**(c)**

**(i)**

1. முகாமைப் பணிப்பாளரிடமிருந்து (MD) ரூபா 100 மில்லியனுக்கு சொகுசு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றைக் கொள்வனவு செய்தல்
2. சொகுசு அடுக்குமாடிக் குடியிருப்பினை MD இன் மனைவியான பிரதம நிதி அதிகாரிக்கு (CFO) தங்குமிடமாக வழங்கியுள்ளது.
3. கம்பனியின் சொத்துக்களை CFO முறைகேடாகப் பயன்படுத்தியதாக மோசமான ஊடக விளம்பரம் காணப்பட்டது.

*(02 புள்ளிகள்)*

**(ii)** இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை நடாத்தும் கணக்காய்வாளர், **ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மைமிக்க வழுக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுக் காணப்படுகின்றன என்ற நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்கு பொறுப்புடையவராவார்**. கணக்காய்வின் உள்ளமைந்த வரையறைகள் காரணமாக, மோசடி அல்லது தவறு காரணமாக சில பொருண்மை மிக்க வழுக்கூற்றுக்கள் கண்டறியப்படாமல் போகக்கூடிய இடர் காணப்படுவதுடன், மோசடி காரணமாக பொருண்மை மிக்க வழுக்கூற்றுக்களின் சாத்தியமான விளைவுகள், தவறுகள் காரணமாக பொருண்மை மிக்க வழுக்கூற்றுக்களின் சாத்தியமான விளைவுகளை விடக் கணிசமாக அதிகமாகக் காணப்படும்.

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 05 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயன்முறை*

**(a)**

**தொழில்சார் ஐயப்பாடு** என்பது ஒரு வினாவெழுப்பும் மனப்பாங்கு மற்றும் ஒரு நியாயமான சந்தேகத்துடன் தவறுகள் அல்லது மோசடிகள் காரணமாக ஏற்படத்தக்க வழுக்கூற்றுக்கள் தொடர்பில் குறிகாட்டக்கூடிய நிலமைகள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்கும் ஒரு அணுகுமுறையாகும்.

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலில் கணக்காய்வாளர் **தொழில்சார் சுயதீர்ப்பினை** பிரயோகித்தல் வேண்டும்.

*(03 புள்ளிகள்)*

**(b) ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பான உறுதிச் சொற்கள்**

1. **உள்ளதாம் தன்மை –** நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ஆதனம் பொறி உபகரணம் அனைத்தும் நிறுவனத்தில் உள்ளதா?
2. **உரிமை மற்றும் பொறுப்புக்கள்** - ஆதனம் பொறி உபகரணம் அனைத்தும் நிறுவனத்தால் கட்டுப்படுத்தக்கூடியதா?
3. **பூரணத்துவம்** - ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் கருத்தில் எடுக்கப்பட்டு பதியப்பட்டுள்ளமை.
4. **மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு –** LKAS 16 இற்கமைய ஆதனம் பொறி உபகரணங்கள் மதிப்பீடு செய்யப்பட்மை மற்றும் பெறுமானத் தேய்வு சரியாக கணக்கிடப்பட்டமை.
5. **வெளிப்படுத்தல்கள்** - ஆதனம் பொறி உபகரணங்களின் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா மற்றும் போதுமான வெளிப்படுத்தல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா?

*(04 புள்ளிகள்)*

**(c)**

1. நிதிக்கூற்றுக்கள் அனைத்து பொருண்மை மிக்க விடயங்களிலும், பிரயோகிக்கத்தக்க நிதி அறிக்கையிடல் சட்டகத்துக்கு இணக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பான ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்த கணக்காய்வாளருக்கு உதவக்கூடிய வகையில், நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்த அடிப்படையில் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படத்தக்க பொருண்மை மிக்க வழுக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது குறித்த நியாயமான உத்தரவாதத்தை பெற்றுக்கொள்ளல்.

2. கணக்காய்வாளரின் கண்டறிதல்களுக்கிணங்க, நிதிக்கூற்றுக்கள் குறித்து அறிக்கையிடுதல் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் தேவைப்பாடுகளுக்கேற்ப தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 08 - நெறிமுறைத் தேவைப்பாடுகள்*

**(a) தொழில்முறை சார் நெறிமுறைகளின் அடிப்படைத் தேவைப்பாடுகள்**

**1. நேர்மை**

நேர்மை என்பது அனைத்து தொழில் முறையிலும் மற்றும் வணிக உறவுகளிலும் நேர்மைத்தன்மையுடன் இருத்தலுக்கான கடப்பாட்டை சுமத்துகின்றது. ஒருமைப்பாடானது நியாயமான கையாளுகை மற்றும் உண்மைத்தன்மை என்பவற்றை உட்கிடையாகக் கொண்டுள்ளது.

**2. புறவயத்தன்மை**

புறவயத்தன்மைத் தத்துவமானது அவர்களது தொழில்முறை அல்லது வணிக தீர்ப்புக்கள் நலன் முரண்பாடு, மற்றவர்களின் தேவையற்ற செல்வாக்கு போன்றவற்றுக்கு விட்டுக்கொடுத்துப் போதல் கூடாது எனும் கடப்பாட்டை சுமத்துகின்றது.

**3. தொழில் திறமை மற்றும் உரிய கவனம்**

தொழில்முறை சார் திறமை மற்றும் உரிய கவனம் செலுத்துகை தத்துவம் பின்வரும் கடப்பாடுகளை தொழில்முறைக்கணக்காய்வாளர் மீது சுமத்துகின்றது.

- வாடிக்கையாளர் அல்லது தொழில் வழங்குனர் திறமையான தொழில்முறைசார் சேவையைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எல்லா மட்டங்களிலும் தொழில்முறை சார் அறிவு மற்றும் திறனைப் பேணுதலுக்கு,
- தொழில்முறை சார் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது அல்லது தொழில்முறைசார் சேவைகளை வழங்கும் போது, பிரயோகிக்கத்தக்க தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்முறைசார் நியமங்களுக்கு இணங்க சிரத்தையுடன் செயற்படல்

SRI LANKA

**4. இரகசியத்தன்மை**

பின்வருவனவற்றிலிருந்து விடுபடுவதற்கு அனைத்து தொழில்முறைக் கணக்காளர்கள் மீதும் கடப்பாட்டை இரகசியத்தன்மைத் தத்துவம் சுமத்துகின்றது.

- சட்ட அல்லது தொழில்முறை சார் உரிமை அல்லது வெளிப்படுத்தலுக்கான கடமை இருந்தால் அன்றி அல்லது முறையான மற்றும் குறித்த அதிகாரமின்றி தொழில்முறை மற்றும் வணிக உறவுகள் பெறுபேறாக கையகப்படுத்தப்பட்ட இரகசியத்தகவல்களை நிறுவனத்திற்கு அல்லது ஈடுபட்டுள்ள அமைப்புக்கு வெளியே வெளிவிடுவதாகும். மற்றும்
- தொழில்முறை மற்றும் வணிக உறவுகளின் பெறுபேறால் கையகப்படுத்தப்பட்ட இரகசியத்தகவல்களை அவர்கள் தமது சொந்த நலனுக்காக அல்லது மூன்றாம் தரப்பினரின் நன்மைக்காக பயன்படுத்தல்.

**5. தொழில்முறை நடத்தை**

பொருத்தமான சட்டம் மற்றும் விதிமுறைகளுடன் இணக்கம் கொள்ளல் மற்றும் தொழில்முறை சார் கணக்காளர் தெரிந்த மற்றும் தெரிந்திருக்க வேண்டிய தொழில்முறையை இழிவுபடுத்தும் எவ்வகையான நடத்தையையும் தவிர்த்தல் போன்றன சார்பாக தொழில்முறை சார் கணக்காளர் மீதும் கடப்பாட்டை தொழில்முறைசார் நடத்தைத் தத்துவம் சுமத்துகின்றது.

***(06 புள்ளிகள்)***

**(b)**

**1. சுய – அக்கறை அச்சுறுத்தல்**

ஒரு நிதியியல் அல்லது ஏனைய அச்சுறுத்தல் தொழில்முறைசார் கணக்காய்வாரின் தீர்ப்பில் அல்லது நடத்தையில் பொருத்தமற்ற வகையில் செல்வாக்குச் செலுத்தும்

***உதாரணங்கள்***

- உறுதியுரை குழுவின் அங்கத்தவர் ஒருவர் உறுதியுரை வாடிக்கையாளரில் நேரடியான நிதியியல் அக்கறையை கொண்டுள்ளார்
- ஒரு நிறுவனம் வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்தான மொத்த கட்டணங்கள் மீது தேவையற்ற வகையில் சார்ந்திருத்தலைக் கொண்டிருக்கும்
- உறுதியுரை குழுவின் அங்கத்தவர் ஒருவர் உறுதியுரை வாடிக்கையாளருடன் ஒரு முக்கியமான நெருங்கிய வணிக உறவைக் கொண்டிருப்பர்
- ஒரு நிறுவனம் ஒரு முக்கியமான வாடிக்கையாளரை இழக்கும் சாத்தியப்பாடு பற்றி கவலை கொள்ளுதல்.

**2. சுய – மீளாய்வு அச்சுறுத்தல்**

தொழில்முறை சார் கணக்காளரினால் அல்லது தொழில்முறைக்கணக்காளரின் நிறுவனம் அல்லது தொழில் செய்யும் அமைப்புக்குள் ஒரு தனிநபரால் நிறைவேற்றப்பட்ட சேவை அல்லது முன்னைய தீர்ப்பின் பெறுபேறுகளை ஒரு தொழில்முறை சார் கணக்காளரால் பொருத்தமான முறையில் மதிப்பீடு செய்ய மாட்டார் என்ற அச்சுறுத்தலாகும். நடைமுறை நடவடிக்கையொன்றின் அல்லது நடைமுறை சேவை ஒன்றின் பகுதியாக ஒரு தீர்ப்பை அமைக்கும் கணக்காளர் அவ்வாறான நிறுவனத்தில் தங்கி இருப்பார்.

***உதாரணங்கள்***

- நிதியியல் முறைமையானது வடிவமைக்கப்பட்டதன் அல்லது முறைமை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் செயற்பாட்டின் விளைதிறன் மீது உறுதியுரை அறிக்கையொன்றை நிறுவனம் வழங்குதல்
- உறுதியுரை பணிக்கமர்த்தலின் பாட விடயத்திற்கான பதிவேடுகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் மூல தரவை நிறுவனம் ஒன்று தயாரித்து வைத்திருத்தல்
- வாடிக்கையாளரின் இயக்குனராக அல்லது உத்தியோகத்தராக இருக்கின்ற அல்லது அண்மையில் இருந்த உறுதியுரைக் குழுவின் அங்கத்தவர் ஒருவர்
- பணிக்கமர்த்தலின் பாட விடயத்தின் மீது தீவிரமாக கணிசமான செல்வாக்கு செலுத்துவதற்கான பதவிநிலையொன்றின் வாடிக்கையாளரால் தொழிலில்

aat SRI LANKA

ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது அண்மையில் இருந்த உறுதியுரைக் குழுவின் அங்கத்தவர் ஒருவர்

- உறுதியுரை பணிக்கமர்த்தலின் பாடவிடய தகவலை நேரடியாக பாதிக்கும் உறுதியுரை வாடிக்கையாளர் ஒருவருக்காக சேவையொன்றை நிறைவேற்றுகின்ற நிறுவனம்

### 3. பரிந்து பேசுதல் அச்சுறுத்தல்

தொழில்முறைசார் கணக்காளரின் புறவயத்தன்மை சமரசம் கொள்ளப்பட்ட குறித்த கணத்திற்கு வாடிக்கையாளரின் நிலையை அல்லது தொழில்வழங்குநரின் நிலையை ஒரு தொழில்முறை சார் கணக்காளர் மேம்படுத்துவார் என்பதான அச்சுறுத்தலாகும்.

***உதாரணங்கள்***

- கணக்காய்வு வாடிக்கையாளரின் பங்குகளை நிறுவனம் மேம்படுத்தல்
- ஒரு தொழில்முறை சார் கணக்காளர் ஒருவர், கணக்காய்வு வாடிக்கையாளர் ஒருவர் மூன்றாம் தரப்பினர்களுடன் கூடிய வழக்குகள் அல்லது பிணக்குகள் நிமித்தம் கணக்காய்வு வாடிக்கையாளர் சார்பாக பரிந்து பேசுவதாக செயல்படல்

### 4. பரீட்சயம் (அந்நியோன்யம்) அச்சுறுத்தல்

வாடிக்கையாளருடன் அல்லது தொழில்வழங்குநருடன் கூடிய நீண்ட அல்லது நெருங்கிய உறவு காரணமாக ஒரு தொழில்முறைசார் கணக்காளர் அவர்களது நலனில் மிக அதீத கருணையை காட்டுவார் அல்லது அவர்களது வேலையை அதீதமாக ஏற்றுக்கொள்வார்.

***உதாரணங்கள்***

- பணிக்கமர்த்தல் குழுவின் ஒரு அங்கத்தவர் வாடிக்கையாளரின் இயக்குனராகவோ அல்லது உத்தியோகத்தராகவோ மிக நெருங்கிய அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவராகவோ இருத்தல்
- பணிக்கமர்த்தல் குழுவின் அங்கத்தவர் ஒருவர் பணிக்கமர்த்தலின் பாடவிடயத்தின் மீது அதீத முக்கியத்துவம் வாய்ந்த செல்வாக்கைக் கொண்ட பதவிநிலையொன்றிலுள்ள வாடிக்கையாளரின் ஒரு ஊழியர் என்ற வகையில் மிக நெருங்கிய அல்லது குடும்ப உறுப்பினராக இருத்தல்
- பணிக்கமர்த்தல் பாட விடயத்தின் மீது அதீத முக்கியத்துவம் வாய்ந்த செல்வாக்கைக் கொண்ட பதவிநிலையொன்றிலுள்ள வாடிக்கையாளரின் இயக்குனர் அல்லது உத்தியோகத்தர் அல்லது ஒரு ஊழியர் அண்மைக்காலத்தில் பணிக்கமர்த்தல் பங்காளராக சேவை புரிந்திருத்தல்.
- அற்பமான அல்லது முக்கியத்துவமற்றதாக இருந்தால் அன்றி, ஒரு தொழில்முறைசார் கணக்காளர் வாடிக்கையாளரிடமிருந்து பரிசுப் பொருட்கள் அல்லது முன்னுரிமை சலுகைகளை ஏற்றுக்கொள்ளல்
- மூத்த (சிரேஷ்ட) ஆளணியினர் உறுதியுரை வாடிக்கையாளருடன் ஒரு நீண்ட சகவாசத்தைக் கொண்டிருத்தல்

aat SRI LANKA

**5. மிரட்டுதல் அச்சுறுத்தல்**

ஒரு தொழில்முறைசார் கணக்காளர் ஒருவர் மீது தேவையற்ற செல்வாக்கை உட்படுத்தி தொழிற்படுவதற்கு முயற்சித்தல் உட்பட, உண்மையானது அல்லது உணரப்பட்ட அழுத்தம் காரணமாக தொழில்முறைசார் கணக்காய்வாளரை புறவயத்தன்மையிலிருந்து செயற்பட முடியாதவாறு தடுக்கப்படுவதற்கான அச்சுறுத்தலாகும்.

***உதாரணங்கள்***

- ஒரு வாடிக்கையாளர் பணிக்கமர்த்தலிருந்து நீக்கப்படுவதாக ஒரு நிறுவனமானது அச்சுறுத்தலுக்கு உள்ளாகுதல்
- ஒரு குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கலுக்கான வாடிக்கையாளரின் கணக்கீட்டு செயன்முறையுடன் தொடர்ச்சியாக நிறுவனமொன்று ஒத்துக்கொள்ளாத போது கணக்காய்வு வாடிக்கையாளர் ஒருவர் திட்டமிட்ட உறுதியுரையற்ற ஒப்பந்தம் ஒன்று கொடுக்கப்பட மாட்டாது எனக் குறிப்பிடுதல்.
- வாடிக்கையாளரால் வழக்கிடுவதாக நிறுவனமொன்று அச்சுறுத்தலுக்கு உட்படுதல்
- கட்டணத்தை குறைக்கும் நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட வேலையின் அளவை பொருத்தமற்ற வகையில் குறைப்பதற்கான அழுத்தத்திற்கு உட்பட்ட நிறுவனம் ஒன்று.
- வாடிக்கையாளரின் ஊழியர் ஒருவர் கேள்விக்குட்பட்ட விடயத்தின் மீது அதிக நிபுணத்துவத்தை கொண்டிருப்பதால், ஒரு தொழில்முறைசார் கணக்காளர் வாடிக்கையாளரின் ஊழியரின் தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதற்கு அழுத்தத்தை உணர்தல்
- கணக்காய்வு வாடிக்கையாளரின் பொருத்தமற்ற கணக்கீட்டு செய்முறையை ஒத்துக்கொள்ளாதுவிடின் ஒரு திட்டமிட்ட மேம்படுத்தல் நடைபெறாது என நிறுவனத்தின் பங்காளர் ஒருவரினால் தொழில்முறைசார் கணக்காளருக்கு அறியப்பட்டிருத்தல்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

*பகுதி **B** முடிவு*



aat SRI LANKA

(மொத்தம் 50 புள்ளிகள்) **பகுதி - C**

## *வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 03 – உள்ளகக் கட்டுபாட்டு செய்முறைகள் மற்றும் வணிக செய்முறைகள்***

**(a) உள்ளகக் கட்டுப்பாடு**

உரிமம் ஒன்றின் நிதியியல் அறிக்கைப்படுத்தப்படுதலின் நம்பகத்தன்மை, செயற்பாட்டின் வினைத்திறன் மற்றும் விளைதிறன், அத்துடன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணக்கம் கொண்டுள்ளமை என்பன தொடர்பாக நோக்கங்களை அடைதல் பற்றி நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு ஆளுகை, முகாமை ஆகியவற்றுடன் பொறுப்பானவர்கள் மற்றும் ஏனைய ஆளணியினர் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டதும், அமுல்படுத்தப்பட்டதும் மற்றும் பேணப்பட்டதுமான செயன்முயையாகும்.

***(03 புள்ளிகள்)***

| (b) பலவீனங்கள் | (c) பரிந்துரைகள் |
|---|---|
| 1. மாதத்தில் இரண்டு தடவைகள் வருமானம் கணக்கிடப்படுகின்றது | 1. சேவைகள் மாத அடிப்படையில வழங்கப்படுவதால், வருமானம் மாத அடிப்படையில் கணக்கிடப்படல் வேண்டும். |
| 2. செயற்பாட்டு திணைக்களத்தில் நிறைவேற்று மட்டத்திலுள்ள ஊழியரால் விலைப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. | 2. சரியான அனுமதி மற்றும் விலைப்பட்டியல் தொடர்பான உபபிரிவுத் தொழிற்பாடுகள் இருத்தல் வேண்டும். |
| 3. நிதியாண்டு முடிவில் மட்டுமே வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | 3. வங்கி இணக்கக் கூற்றுக்கள் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| 4. வாடிக்கையாளர் உடன்படிக்கைகள் திறந்த இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. | 4. உடன்படிக்கைகள் சரியான பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட வேண்டும் |
| 5. பிற்திகதியிடப்பட்ட காசோலைகள் செயற்பாட்டு திணைக்களத்தில் நிறைவேற்று மட்டத்திலுள்ள ஊழியரால் காசோலைத் திகதி வரை வைத்திருக்கப்படும். | 5. பிற்திகதியிடப்பட்ட காசோலைகளக்கான பதிவேடு பேணப்படுவதோடு காசோலைகள் சரியான பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட வேண்டும் |
| 6. 6 மாதங்களுக்கொரு தடவை உண்மைத் தரவுகள் பாதீட்டுடன் ஒப்பிடப்படுகின்றன. | 6. மாதாந்த அடிப்படையில் உண்மைத் தரவுகள் பாதீட்டுடன் ஒப்பிடப்பட வேண்டும். |
| 7. விலைப்படடியலுக்கான மீளாய்வு மற்றும் அனுமதி தொடர்பான சரியான நடைமுகைள் இல்லை. | 7. விலைப்பட்டியல்கள் நிதி முகாமையாளரால் மீளாய்வு செய்து அனுமதியளிக்கப்படல் வேண்டும். |
| 8. வாடிக்கையாளர்களுக்கான மாதாந்த அறிக்கை விநியோகித்தல் தொடர்பாக பேணப்படுவதில்லை. | 8. வாடிக்கையாளர்களுக்கான மாதாந்த அறிக்கை விநியோகத்தலை தொடர்ச்சியாக பேணுதல். |

**(b) - *(05 புள்ளிகள்)***
**(c) - *(05 புள்ளிகள்)***

**(d)**

| IT பொதுக்கட்டுப்பாடுகள் | காட்சிகளிலிருந்து உதாரணங்கள் |
|---|---|
| **கணணி பிரயோகத்தின் அபிவிருத்தி** | ▪ முறைமை வடிவமைப்பின் மீதான நியமங்கள், நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல்.<br>▪ கணணிப் பயன்பாட்டாளர்களாலும் முகாமையினராலும் அங்கீகாரம்.<br>▪ வடிவமைத்தலுக்கு பொறுப்பானவர்கள் பரிசோதனைக்கும் பொறுப்பானவர்கள் அல்லர் என்றவாறு கடமைகளை பாகுபடுத்தல். |
| **நிகழ்ச்சி நிரலில் அங்கீகாரமற்ற மாற்றங்களைத் தவிர்த்தல் அல்லது கண்டுபிடித்தல்** | ▪ கடைமைகளை பாகுபடுத்தல்<br>▪ தகவல் அணுகுதலை கணணி செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் மட்டும் என வரையறுக்கத்தக்க வகையில் கடவுச்சொல் பாதுகாப்பு.<br>▪ பூட்டப்பட்ட கதவுகள் மற்றும் விசைப்பலகைகள் மூலம் அணுகுவதில் மத்திய கணிணிக்கு இறுக்கத்தை ஏற்படுத்தல<br>▪ மென்பொருள் மீதான கணணி நச்சு நிரல் பரிசோதனை. கணணி நச்சுநிரலுக்கெதிரான மென்பொருள் பாவனை மற்றும் அங்கீகரிக்கப்படாத நிரல்கள் மற்றும் கோவைகளின் பயன்பாட்டை தவிர்த்தல்<br>▪ எடுக்கப்படுகின்ற நிரல்களின் காப்பு பிரதிகள் மற்றும் அவற்றை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தல் |
| **சோதனையிடல் மற்றும் நிகழ்ச்சி நிரல் மாற்றங்களை ஆவணப்படுத்தல்** | ▪ சோதனை நடைமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை<br>▪ சரியான ஆவணப்படுத்தல்கள் இல்லை<br>▪ கணணிப் பயன்பாட்டாளர்கள் மற்றும் முகாமையினால் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரித்தல்<br>▪ ஊழியர்களுக்கு சரியான பயிற்சிகள் வழங்கப்படாமை |
| **கோப்புகளில் அங்கீகாரமற்ற மாற்றங்களைத் தவிர்ப்பதற்கான கட்டுப்பாடுகள்** | ▪ தொலைநிலை முனையங்களுக்கான பௌதீக பாதுகாப்பின்மை<br>▪ IT வழங்களை பயன்படுத்துவதற்கான வரையறுக்கப்பட்ட அணுகல்கள் இல்லாமை<br>▪ தடுப்புசுவர்கள் இன்மை (firewalls)<br>▪ கடவுச்சொற்கள் போன்ற பயனர் அடையாளக்கட்டுப்பாடுகள்<br>▪ தரவுக்குறியாக்கம் |
| **செயற்பாடுகளின் தொடர்ச்சியான உறுதிப்படுத்தல் கட்டுப்பாடுகள்** | ▪ நிரல்கள் மற்றும் தரவுக் கோப்புகளின் கூடுதல் நகல்களை தளத்திலிருந்து சேமிக்கிறது<br>▪ தீ மற்றும் பிற ஆபத்துக்களுக்கெதிராக உபகரணங்களைப் பாதுகாத்தல்<br>▪ காப்பு பிரதி சக்தி மூலங்கள்<br>▪ பேரழிவு மீட்பு நடைமுறைகள் - காப்பு பிரதி வசதிகளின் கிடைப்பனவு<br>▪ பராமரிப்பு ஒப்பந்தங்கள் மற்றும் காப்பீடு |

***(08 புள்ளிகள்)***

**(e)**

1. தொடர்பாடல் மற்றும் ஒருமைப்பாடு, நன்நெறி பெறுமானங்கள் என்பவற்றுக்கான அழுத்தம்
2. செயற்றிறனுக்கான அர்ப்பணிப்பு
3. ஆளுகையுடன் பொறுப்பாணை கொண்டவர்களின் பங்குபெறுகை
4. முகாமைத்துவ தத்துவம் மற்றும் செயற்படுத்துகை சுழற்சி
5. நிறுவனக்கட்டமைப்பு
6. அதிகாரம் மற்றும் பொறுப்பு ஒப்படைப்பு பணி
7. மனிதவள கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 25 புள்ளிகள்)***

## *வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 03 – உள்ளகக் கட்டுபாட்டு செய்முறைகள் மற்றும் வணிக செய்முறைகள்***

**(a)**

1. வருமான முறைமை
2. வியாபார வருமதிகள்
3. வருமான வரி
4. தொடர்புடைய கட்சியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்
5. நிர்வாகச் செலவுகள்
6. விநியோகச் செலவுகள்
7. இருப்பு
8. ஆதனம், பொறி, உபகரணம்
9. காசு மற்றும் வங்கி
10. தவணை கடன்கள்

aat SRI LANKA

***(05 புள்ளிகள்)***

***அத்தியாயம் 05 – இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயற்பாடுகள்***

**(b)**

1. நிதிக்கூற்றுக்களின் மூலக்கூறுகள் (உ-ம் : சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை, வருமானம், செலவினம்)
2. பயனர்கள் கவனம் செலுத்தக்கூடிய உருப்படிகள் காணப்படுகின்றனவா?
3. நிறுவனம், தொழிற்துறை மற்றும் பொருளாதார சூழலின் தன்மை.
4. நிறுவனத்தின் உரிமைக்கட்டமைப்பு மற்றும் நிதியிடல்
5. அளவுகோலின் ஒப்பீட்டு நிலையற்ற தன்மை

***(04 புள்ளிகள்)***

*அத்தியாயம் 06 – கணக்காய்வுச் சான்றுகள்*

**(C)**

நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தலில் முகாமையின் பொறுப்பானது நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை மதிப்பீடு செய்து உறுதிப்படுத்தல் வேண்டும். பின்வரும் நிதிக் குறிகாட்டிகள், நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கான சாத்தியத்தின வழங்குகின்றது.

**நிதிசார் குறிகாட்டிகள்**

1. நிகர பரிப்பு அல்லது நிகர நடைமுறைப் பரிப்பு நிலமை
2. புதுப்பித்தல் அல்லது திருப்பிச் செலுத்துவதற்கான யதார்த்தமான வாய்ப்புக்களற்ற, முதிர்வை நெருங்கும் நிலையான கடன்கள்
3. கடன்வழங்குனர்களால் நிதிசார் உதவிகள் திரும்பப் பெறப்படுவதற்கான குறிகாட்டிகள்
4. எதிர்கணியத் தொழிற்பாட்டுக் காசுப்பாய்ச்சல்கள்
5. பாதகமான முக்கிய நிதி விகிதங்கள்
6. பெருமளவு தொழிற்பாட்டு நட்டங்கள் அல்லது காசுப்பாய்ச்சல்களை உருவாக்கப்பயன்படும் சொத்துக்களின் மதிப்பிலான கணிசமான வீழ்ச்சி
7. செலுத்தப்படாத அல்லது தொடரப்படாத பங்கிலாபங்கள்
8. கடன்கொடுத்தோருக்கு உரிய திகதிகளில் கொடுப்பனவு செய்ய இயலாமை
9. கடன் ஒப்பந்தங்களின் விதிமுறைகளுக்கு இணங்க இயலாமை
10. வழங்குனர்களுடனான ஊடுசெயல்கள் கடனிலிருந்து விநியோகத்தின் போதே பணம் நிபந்தனைக்கு மாற்றமடைதல்
11. அத்தியாவசியமான புதிய உற்பத்தி விருத்தி அல்லது பிற அத்தியாவசியமான முதலீடுகளுக்கு நிதியைப் பெற இயலாமை.

தொடர்ந்தியங்கும் தன்மைக்கான எடுகோள்கள் பொருத்தமற்றவை என முகாமை கருதினால், நிதிக்கூற்றுக்கள் வேறுபட்ட முறையில் தயார் செய்யப்பட வேண்டும்.

***(05 புள்ளிகள்)***

*அத்தியாயம் 07 – கணக்காய்வு அறிக்கையிடல்*

**(d)**

**1. கடன் உடன்படிக்கைகளை மீறுதல்**

இதன் விளைவாக நிறுவனம் கேள்வி அடிப்படையில் கடனை செலுத்த நேரிடும். ஆகவே செலுத்த வேண்டிய அனைத்து கடன்க நடைமுபைபொறுப்பாக மீளவகைப்படுத்த வேண்டும். அவ்வாறு முகாமை செய்யத்தவறின் கணக்காய்வாளர் பொருண்மைத்தன்மை வாய்ந்த விடயம் என்பதால் மாற்றியமைக்கப்பட்ட அபிப்பிராயத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

**2. இருப்பு நட்டம்**

31 டிசம்பர் 2021 இல் (அறிக்கையிடும் திகதி) கீழ்கொணர்ந்த இருப்பின் பெறுமதி ரூ.44,493,000 ஆகும். இருப்பினும் 01.ஜனவரி 2022 இல் ரூ. 42,800,000 இற்கு விற்கப்பட்டுள்ளது. இதன் விளைவான நட்டம் ரூ 1,693,000 பொருண்மை அளவை விட அதிகமாக காணப்படுவதுடன் LKAS 10 இற்கமைய இந்நட்டமானது இலாபநட்டக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு முகாமை செய்யத்தவறின் கணக்காய்வாளர் அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும்.

**3. பெறுமானத்தேய்வு**

நிறுவனமானது 50% பெறுமானத் தேய்வான ரூ. 1,250,000 மட்டுமே கணக்ககுகளில் பதிவளித்துள்ளது. தனிப்பட்ட சீராக்கமற்ற தொகையானது பொருண்மை மட்டத்தை விட குறைவாக உள்ளது. கணக்காய்வாளர் மொத்த சீராக்க வேண்டிய பெறுமதியானது பொருண்மை மட்டத்தை விட அதிகமாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதுடன் அதற்கமைய செயற்பட வேண்டும்.

மேற்குறித்த விடயங்களின் மொத்த விளைவானது பொருண்மை வாய்ந்தது. முகாமையானது சீராக்கம் செய்யத்தவறின் கணக்காய்வாளர் அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும்.

***(07 புள்ளிகள்)***

***அத்தியாயம் 07 – கணக்காய்வு அறிக்கையிடல்***

**(e) கணக்காய்வு அறிக்கையில் பின்வரும் சந்தர்ப்பங்களில் அபிப்பிராயத்தை மாற்றியமைக்க முடியும்**

- கணக்காய்வாளர் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் பொருண்மைவாய்ந்த தவறுகள் அற்றவை எனும் முடிவுக்கு வரமுடியாத பொழுது.
- நிதிக்கூற்றுக்கள் பொருண்மை வாய்ந்த தவறுகளற்றவை என்பதை உறுதிப்படுத்த கணக்காய்வாளருக்கு போதிய மற்றும் பொருத்தமான சான்றுகள் கிடைக்கப்பெறாமை.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

*பகுதி C முடிவு*



aat SRI LANKA

## *Notice:*

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*